**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண்.258/2013**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. ராஜா முகமது, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 08.08.2023**

**பெயர் - ரமேஷ்**

**த/பெ - நாகையன்**

**வயது - 54**

**சாட்சி - PW2**

**ஊர் - கோளூர்**

**தொழில் - விவசாயம்**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12.57 p.m.**

**முதல் விசாரணை -**

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (1). எனது ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட ஒளிநகல் **(வாசா ஆ 5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் திருப்பப்பட்டது.

**குறுக்கு விசாரணை-**

3. எனது சொந்த ஊர் கூரப்பாக்கம் என்றால் சரிதான். எத்தனை வருடங்களுக்கு முன்பு கோளூர் கிரமத்திற்கு வந்தேன் என்றால் 2000 வருடத்தில் வந்தேன். வாதி

கோவிந்தசாமியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவருடைய வயல் வேலைகளை நான் பார்த்ததால் அவரை எனக்கு தெரியும். அவருக்கு எவ்வளவு நிலங்கள் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. வாதி அழைத்ததன் பெயரில் நான் சாட்சியம் அளிக்க வந்தேனா என்றால் ஆமாம். எனது பிரமான வாக்குமூலம் வாதி தயார் செய்து கொடுக்க நான் கையொப்பம் மட்டும் இட்டேன் என்றால் சரிதான்.

4. கோவிந்தசாமி அங்கமுத்து மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் நில தகராறு சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்தார். மேற்படி அங்கமுத்துவின் வயல் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. அங்கமுத்து அவரது விவசாய நிலத்தை விற்பனை செய்துவிட்டார். சென்ட் எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்தார் என்றால் ரூபாய் 1000/- ஆகும். மொத்தம் எவ்வளவு தொகை கொடுத்தார் என்றால் ரூபாய் 60,000/- கொடுத்தார். எந்த தேதியில் மேற்படி பணத்தை கொடுத்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. 2009ல் கொடுத்தார். மேற்படி பணத்தினை கொடுக்கும் போது யார் யார் உடன் இருந்தது என்றால் நான் இருந்தேன் உடன் யார் யார் இருந்தது என்று தற்போது ஞாபகம் இல்லை. சாட்சி கையொப்பம் யார் யார் இட்டது என்றால் பாபு சாட்சி கையொப்பம் இட்டார். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமான வாக்குமூலத்தை வாதியின் வக்கில் தயார் செய்தார் என்றால் சரிதான்.

5. வாசா ஆ 1ல் பாபு என்பவர் எங்கு சாட்சி கையொப்பம் இட்டுள்ளார் என்றால் அவரை நான் பாபு என்றழைப்பேன் அவர் பெயர் பாரதிராஜா ஆகும். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். பாரதிராஜாவின் கையொப்பம் வாசா ஆ 1 ல் எங்கு உள்ளது என்றால் முதலாம் சாட்சி கையொப்பமாக உள்ளது. எனது முன்னிலையில் தானே பணம் கொடுத்தார் என்றால் ஆமாம். சொத்தின் புல எண் விவரம் என்னவென்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் நான்கு எல்லை விவரம் என்னவென்றால் எனக்கு தெரியாது என சாட்சி முதலில் கூறி பின்னர் கிழக்கு பக்கம் கிருத்துவ பாதிரியார் உள்ளதாகவும், தெற்குபக்கம் துளசி ராமன் நிலம் உள்ளதாகவும், மேற்கு பக்கம் நாகப்பன் நிலம் உள்ளதாகவும், வடக்கு பக்கம் தனக்கு சரியாக என்ன உள்ளது என்று தெரியாது என்று தெரிவிக்கிறார். வாசா ஆ 1 எழுதும் போது நான் உடன் இல்லை என்றும் வாதி சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மீதம் உள்ள கிரைய தொகையான ரூபாய் 1000/-

எத்தனை மாதத்திற்குள் கொடுக்கவேண்டும் என ஒப்பந்தம் செய்தனர் என்றால் பத்திர பதிவு செய்யும் போது கொடுப்பதாக ஒப்பந்தம் பேசினர்.

6. வழக்கு சொத்தில் யார் பயிர் செய்வது என்றால் தற்போது கோவிந்த சாமி பயிர் செய்கிறார். மேற்படி வாசா ஆ 1ல் 6 மாத காலத்திற்குள் மீதி பணத்தை கொடுக்கவேண்டும் என்ற சரத்து உள்ளதே என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் வாசா ஆ 1 ஆவணத்தில் தரப்பினர் இல்லை என்றும் அதனால் எனது சாட்சியத்தை ஏற்க்ககூடாது என்றால் சரியல்ல.

**விசாரணை தொடங்கும் நேரம்- 01.14 p.m.**